திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, வேளச்சேரி தொகுதிக்கு உட்பட்ட தரமணி பகுதியில் இரண்டு நியாய விலைக் கடைகள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் உள்ளன. அவற்றைக் கூடிய விரைவில் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அதிவிரைவில் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

34—

பாலம்

***129—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வட்டம், வடக்கிபாளையத்திலிருந்து நடுப்புணி செல்லும் சாலையிலுள்ள பழைய பாலத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பொள்ளாச்சி வட்டம், வடக்கிபாளையத்திலிருந்து நடுப்புணி செல்லும் சாலையிலுள்ள பழைய பாலத்தைப் புதுப்பித்துக் கட்டும்

2012 பிப்ரவரி 3]

பணி பன்மாநிலங்களை இணைக்கும் திட்டத்தின்கீழ் (Inter State Connectivity) செயல்படுத்த மைய அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்று அழாத குழந்தை உண்டோ; குழந்தையின் அழுகுரல் கேட்டு சும்மா இருந்துவிட்ட தாயும் உண்டோ என்பதற்கிணங்க, தமிழ்நாட்டையும் கேரளத்தையும் இணைக்கும் இந்த முக்கிய சாலையில் அமைந்துள்ள, நீண்டநாள் கோரிக்கையான கேரள எல்லைக்கு மிக அருகிலுள்ள இந்தப் பாலம் மிகவும் குறுகலாகவும், பழமையானதாகவும் இருக்கின்றது. பல்லாயிரக்கணக்கானோர் தினமும் பயன்படுத்தக்கூடிய இந்தப் பாலத்தைச் செப்பனிட வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தவுடன் விரைந்து நடவடிக்கை எடுத்து, புதுப் பாலம் கட்டும் பணிக்கு ஆவன செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றிதனைக் கூறிக்கொண்டு, இந்தப் பணி எப்போது துவங்கும்; எவ்வளவு தொகையிலே இந்தப் பாலம் கட்டப்படவிருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ள ஆவலுடன் இருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் கி.மீ. 122/0, வடக்கிபாளையத்திலிருந்து நடுப்புணி செல்லும் சாலையில் கிலோ மீட்டர் 13/4-லிருந்து 17/4 வரை மேம்பாடு செய்து, கிலோ மீட்டர் 16/8-ல் மாற்று நேர்பாட்டில் பாலம் கட்டும் பணியை பன்மாநில இணைப்புச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செய்வதற்கு ரூ.259.66 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீடு மைய அரசின் நிருவாக ஒப்புதல் பெறுவதற்கு முன்மொழிவு 19-7-2011 அன்று அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்டவுடன் பாலப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள்.*

திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை-ரேணிகுண்டா சாலை ஆவடி தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர், பட்டாபிராம், திருமுல்லைவாயில் பகுதி நெடுஞ்சாலை மிகவும் மோசமாக இருக்கிறது. ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து சாலை அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலையை ஆய்வு செய்து, அது பழுதடைந்திருந்தால் அதைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

அடிப்படை வசதிகள்

***4560—திரு. துரை. மணிவேல்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா ஆலயப் பகுதியில் சுற்றுலா நிதி உதவித் திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகள் மற்றும் தங்கும் வசதிகள் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?